மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அனுமதியின்றி கிணறு தோண்டக்கூடாது என்று தடுக்கிறோம். ஆனால், அனுமதியின்றி கிணறு தோண்டுபவர்களுக்கு 3 வருடத்திலிருந்து 7 வருடங்கள் வரை சிறைத் தண்டனை என்பது மிகவும் அதிகம். எனவே, அந்தத் தண்டனைக் கால அளவைக் குறைத்து, சட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்ன, இதுதானா?

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகள் என்பது பொதுவாக 4 inch, 6 inch, 8 inch என்று போடப்படுவதில் எந்தவிதமான ஆபத்தும் கிடையாது. ஆனால், 12 inch, 24 inch என்று போடும்போதுதான் ஆபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, ஆழ்குழாய்க் கிணறுகள் என்று ஒட்டுமொத்தமாக பொத்தாம் பொதுவாக குறிப்பிட்டு, அனைத்திற்கும் அனுமதி பெற வேண்டும் என்று வகுத்திருக்கிற விதிகள் என்பது, சாதாரணமாக சிறு விவசாயிகள் அல்லது தோட்டம் வைத்திருப்பவர்கள், தனி வீடுகள் வைத்திருப்பவர்கள் போர் போடுவதில் பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, இதை பொத்தாம் பொதுவாகப் போடாமல் ஆபத்துகளை விளைவிக்கக்கூடிய 12 inch-லிருந்து 24 inch வரையிலான பெரிய ஆழ்குழாய்க் கிணறுகளுக்கான தடையைக் கொண்டு வந்தால் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சுருக்கமாகப்பேசி முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதோடு இந்த திறந்தவெளிக் கிணறுகள் என்பதற்கான ஒரு வரையறையையும் ஏற்படுத்தி இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவது சிறப்பாக இருக்கும். எனவே, இந்தச் சட்டத்தை நிலைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டங்களை இயற்றுவது மக்களுக்காகத்தான். கிராமங்களிலே கிணறுகளைத் தோண்டுவதற்கும் உரிமம் பெற்றுத் தோண்ட வேண்டும். ஆனால், சிறிய கிணறுகளை அதாவது அவசியத்திற்குத் தோண்டுவதற்கு இந்தச் சட்டம் செல்லுமா என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, தண்டனையைக் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சிறு குழந்தைகளின் பாதுகாப்பிற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களிலெல்லாம் அதிகமான விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நம்முடைய மாநிலத்தில் விபத்துகள் குறைவாக இருந்தாலும், அவை நடைபெறுவதற்கு முன்பாகவே காக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல விவசாயிகளுக்கோ, தனி வீட்டில் இருப்பவர்களுக்கோ இந்தச் சட்டத்தினால் எந்தப் பாதிப்பும் கிடையாது. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். குழாய் அமைக்கும்பொழுது கண்டிப்பாக அதற்கு ஒரு தடுப்புச் சுவர், மூடி வைத்து விபத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதாவது, குழந்தைகளின் பாதுகாப்பிற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2014 ஆகஸ்ட் 12

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2014), மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 4-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.